**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள்.11.08.2026

**Case No.DOP.412/2022**

**RW. 1**

**திரு.கிறிஸ்டின் கெனிஸ்டன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

எனக்கும் மனுதாரருக்கும் 14.11.2005 ல் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடந்தது என்றால் ஆமாம். நானும் மனுதாரரும் கிறிஸ்தவ மதத்தில் வெவ்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் என்றால் ஆமாம். திருமணத்தின் பயனாக எங்கள் இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். இல்லற வாழ்க்கையில் மனுதாரரை நான் பலமுறை துன்புறுத்தியதன் காரணமாக தான் குழந்தை பேறு இல்லை என்றால் சரியல்ல. நான் தற்போது என்ன வேலை பார்க்கிறேன் என்றால் DCW Ltd. நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். நானும் மனுதாரரும் சேர்ந்து பல்வேறு சர்ச்சுகளில் ஊழியம் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். தேவபிரசன்னம் என்ற மாத இதழையும் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். தேவபிரசன்னம் மாத இதழானது நான் கடைபிடிக்கும் சிஎஸ்ஐ வழிமுறைப்படி தான் நடத்தி வந்தோம் என்றால் சரிதான். எனக்கு மது பழக்கம் உண்டு என்றால் இல்லை. 2017 ல் எனக்கு கையில் காயம் ஏற்பட்டு திருச்செந்தூர் எடிசன் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஆமாம். நான் மது அருந்தியதால் உடனடியாக எனக்கு சிகிச்சை அளிக்க இல்லை என்றால் மறுக்கிறேன். தேவபிரசன்னம் மாத இதழை நடத்துவதற்காக என் மனைவியிடமிருந்து கொஞ்ச கொஞ்சமாக ரூ.17 லட்ச ரூபாய் வாங்கினேன் என்றால் இல்லை. என் மனைவியிடமிருந்து 2013 ல் 40 சவரன் நகைகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 2013 ல் நகையை வாங்கி சொந்த வீடு வாங்குவதற்காக ஆறுமுகநேரி முத்துக்கிருஷ்ணா நகரில் 17 செண்ட் வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொந்த பணத்தில் இடம் வாங்கினேன். எனக்கும் மனுதாரருக்கும் இடையே அடிக்கடி ஏஜி பிரிவு, சிஎஸ்ஐ பிரிவுக்காக சண்டை வரும் என்றால் இல்லை. இருவரும் இந்தியா முழுவதும் ஒன்றாக பயணித்திருக்கிறோம். மனுதாரரின் மாமா ஏஜி சபைக்கு வரவேண்டும் என பிரச்சினை செய்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால்

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.11 17:21:52 +0530

சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்களை அனைத்தும் என்னால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் மனுதாரரின் தங்கை 40 வயதாகிறது, அவருக்கு திருமணமாகவில்லை என்று சொல்லியிருப்பது இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல. நான் கடைசியாக என் மனைவியை பிரிந்து போனேன் என்றால் நான் பிரிந்து போகவில்லை, அவர் தான் சென்றார். எந்த மாதம் எந்த தேதியில் பிரிந்தார் என்றால் நவம்பர் 2021, தேதி ஞாபகமில்லை. என் மனைவி பிரிந்து போன பிறகு சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்தேன், அதனால் தான் இந்த வழக்கையும் நடத்தி வருகிறேன். சேர்ந்து வாழ சட்டப்படி ஏதாவது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் அவர் தாக்கல் செய்த வழக்கில் தான் இணைந்து சொல்லியிருக்கிறேன். மனுதாரர் தன்னுடைய 40 பவுன் நகையையும் 17 லட்ச ரூபாயும் கேட்டதால் தான் என் எதிருரையில் சேர்ந்து வாழ்வதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தையின்மை சிகிச்சைக்காக பல பேரிடம் கடன் வாங்கி நான் ஊதாரியாக செலவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டவை என்றாலும், அவை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பொய்யானவை என்றால் சரியல்ல. மனுதாரரின் பரிகாரங்கள் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு பணம் கொடுத்து வருவது சம்பந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், சாட்சி மீண்டும் மனுதாரரே பணம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டதாக தெரிவித்தார்.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.11 17:21:58 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**